




RNI. Rgn. TNTAM/2022/82166

# செய்தி நேரம்

SEITHI NERAM

மாதமிருமுறை இதழ்








மலர் : 3 இதழ் : 18 | 2024 டிசம்பர் 01 - 15 | 4 பக்கங்கள் | விலை :ரூ 10/-


## வரி வசூல்:

# மக்களை வஞ்சிக்கும் உள்ளாட்சித் துறை?

தமிழக மக்களின் வார்டு வாரியான முன்சிபல் பிரச்சினைகளை சரிசெய்யவே உள்ளாட்சி தேர்தல் நடத்தப்பட்டு கவுன்சிலர்களை தேர்வு செய்கின்றனர். ஆனால் கவுன்சிலர்கள் தேர்வு என்பது மக்களுக்கான வரிகளை உயர்த்துவதற்கான தேர்வு என்பது போல உள்ளதாக பலரும் குற்றம் சாட்டுவதை தொடர்ந்து விசாரனையில் இறங்கினோம்.

உள்ளாட்சி தேர்தல் மூலம் கவுன்சிலர்கள் தேர்வு செய்யப்பட்டால் மக்களுக்கு வார்டு வாரியான பிரச்சினைகளை தீர்த்து வைப்பார்கள் என்ற மக்களின் நம்பிக்கை பொய்த்து போனதாகவும், அதன் எதிரோலி தான் 2024 எம்.பி. தேர்தலில் சில வார்டுகளில் வாக்கு சதவிதம் குறைய காரணம் என கூறுகின்றனர்.

மக்களின் வசதிக்காக ரோடு போடுதல், பேச்-ஓர்க் பார்த்தல், மழைநீர் வடிகால் தூர்வாரி சீர் அமைத்தல், பாதாள சாக்கடை பணிகள், குடிநீர் பணிகள், மாநகராட்சி, நகராட்சி, உள்ளாட்சியின் மக்கள் நலன் சார்ந்த பணிகள், புதிய வீடு, வணிக வளாகம், குடியிருப்பு பகுதியில் சட்ட விரோதமாக கட்டப்படும் வணிக வளாகம் போன்ற அனைத்து பணிகளிலும், கமிஷன், கரப்ஷன் ஊழல், இன்னும் உண்மையினை சொல்லப்போனால் பணம் மிரட்டி பறிப்பது, கவுன்சிலர்களுக்கு சம்மந்தம் இல்லாத வார்டுகளில் செயல்படும் பிளாட்பார கடைகள், ஹோட்டல்களில் மிரட்டி பணம் வசூலிப்பது, கல்லாப் பெட்டியை திறந்து பணம் பறித்து செல்வதை தவிர வேறு உறுப்படியான வேலைகள் எதுவும்மே செய்வதில்லை என்றே குற்றம் சுமத்துகின்றனர்.

கவுன்சிலர்கள் தான் இப்படி என்றால் அதிகாரிகளும் சளைத்தவர்கள் அல்ல, டெண்டர் எடுத்து செய்யப்படும் வேலையினை மேற்பார்வையிட வேண்டிய அதிகாரிகள், ஜே.யி.க்கள், முன்சிபல் ஊழியர்கள் என அனைவரும் தங்கள் பணியினை சரிவர செய்யாமல், பணியில் காட்டும் அக்கறையை விட இரண்டு மடங்கு அக்கறை கமிஷன் வாங்குவதில் காட்டுவதால் தான், நல்ல நிலையில் இருந்த சாலைகள் பள்ளம் மேடாகவும், மழைநீர் கால்வாயாக மாறி அங்கங்கே தேங்கி மக்கள் விபத்துக்குள்ளாகுகின்றனர்.

மாவட்ட ஆட்சியர், முன்சிபல் கமிஷனர், முன்சிபல் சேர்மேன், உள்ளாட்சித்துறை தலைவர்கள், மேயர்கள் என அனைவரும் தங்களின் பணியினை செய்யாததாலே மக்களுக்கான




அவல நிலைகள் தொடர்கதையாக தொடர்கின்றன என்றே கூறுகின்றனர்.

விதிகளை மீறி சட்டத்திட்டத்திற்கு விரோதமாக, தேவைப்பட்ட இடைவெளி இன்றி கட்டப்படும் குடி இருப்புக்கள், குடி இருப்பு பகுதியில் கட்டப்படும் வணிகவளாகங்கள், குடி இருப்பு பகுதிகளில் விதிகளை மீறி செயல்படும் பட்டரைகள், குடோன்கள், ஹாஸ்டல்கள், தீப்பிடிக்கக் கூடிய அலுவலகங்கள், வெடித்து சிதறக் கூடிய கேஸ்-வெல்டிங் பட்டரை, சோடா கம்பெனி போன்ற அனைத்திற்கும் கமர்ஷியல் மின் இணைப்பு இருக்கும் போது கமர்ஷியல் வரி இல்லாது வரி வசூலிக்கும் பில் கலெர்டர்களின் "தில்லாலங்கடி" மோடி மஸ்தான் வேலைகளே காரணம், மேலும் வணிக கட்டடங்களை குடியிருப்புகளாக காட்டி செய்யப்படும் கோல்மால்கள் லட்சக்கணக்கில் உள்ளனவாம்.

மக்களுக்கான இந்த சிரமம் பிடித்த இம்சைகள் போதாது என கடந்த 2022ம் ஆண்டு மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் என அனைத்து உள்ளாட்சிகளில் சொத்து வரியை உயர்த்திட திராவிட மாடல் அரசு உத்தரவு இட்டது.

திராவிட மாடல் அரசின் உத்தரவு படி, குறைந்த பட்சம் "25" சதவிதம் முதல் அதிகபட்சம் "150" சதவிதம் வரை மக்களுக்கான சொத்து வரி உயர்த்தப்பட்டது.

குடியிருப்பு வீடுகளுக்கு "600" சதுர அடிக்கு குறைவான பரப்பளவு கொண்ட ஒரு ஏழையின் வீட்டுக்கு "25" சதவிதம் வரி உயர்த்தப்பட்டது. "600" முதல் 1200 சதுர அடி வரை பரப்புளவு வீட்டுக்கு "50" சதவிதம் வரி உயர்த்தப்பட்டது, "1201" முதல் "1,800" சதுர அடிவரை பரப்பளவு வீட்டுக்கு "75" சதவிதம் வரி உயர்த்தப்பட்டது, "1,801" சதுர அடிக்கு அதிகமாக உள்ள பரப்பளவு வீட்டுக்கு 100 சதவிதம் சொத்து வரியினை உயர்த்தியது அரசு.

இந்த சொத்துவரியினை உயர்த்த மக்களால் தேர்வு செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் மேயர், மாமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டு வந்தனர், தீர்மானத்திற்கு திராவிட மாடல் கவுன்சிலர்கள், மட்டுமின்றி கூட்டணி கவுன்சிலர்கள், அதிமுக கவுன்சிலர்கள், பாஜக கவுன்சிலர்கள், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட த.வெ.கவின் சுயச்சை கவுன்சிலர்கள் என அனைத்து கட்சி கவுன்சிலர்களும் எதிர்ப்பு தெரிவிக்கும் மாயயை ஏற்படுத்தியதால் "2022ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஆண்டுக்கு "6" சதவித வரி உயர்வை நிறுத்தி வைப்பதாக முன்சிபல் நிர்வாகம் அறிவித்தது. இருந்தும் "600" சதுர அடி பரப்பளவுக்குள் இருக்கும் வீட்டிற்கு வசூலிக்க வேண்டிய ரூ. 324 க்கு பதில் ரூ. 405 ஆக உயர்த்தி வசூலித்தனர். இதில் வேதனை என்னவெனில் சிறிய தரைத்தளம் மட்டுமே கொண்ட ஒட்டு வீட்டுக்கு வசூலிக்கப்பட்ட ரூ. 405 தான் இரண்டடுக்கு மாடி, வணிகவளாகத்துடன் கட்டப்பட்ட இரண்டடுக்கு மாடிக்கும் வசூலிக்கபடுகிறது.

மேலும் "600" சதுர அடி தரை தளம் உள்ள சிறிய வீட்டுக்கு வசூலிக்கபடும் தண்ணீர் வரி, பாதாள சாக்கடை வரி, குப்பைவரி என அனைத்து வரிகளும் "600" சதுர அடியில் கட்டப்பட்ட இரண்டு அடுக்கு மாடி வீட்டிற்கும் வசூலிக்கப் படுகிறது.

இதில் பல நூறு வணிக கட்டடங்களை குடியிருப்பு பகுதியாகபில் கலெக்டர்களால்காட்டப்பட்ட அனைத்து வாடகை வீடுகளுக்கும், வணிககட்டடங்களுக்கும், விட்டு வரியாக வசூலித்து கோல்மால் செய்வதால் உள்ளாட்சி துறைக்கும். அரசுக்கும் தமிழகம் முழுக்க பல லட்சம் கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது, என்பதை மறுக்க முடியாது. இதில் இன்னொரு வேடிக்கை என்னவெனில் வீட்டு வரி செலுத்தும் பலருக்கு வணிக மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதே யதார்த்த உண்மை.

மேலும் பல உடன்பிறப்புகளின் வீட்டுக்கு குறைவான வரியும், ஒரு சில உடன்பிறப்புகளின் வீட்டில் வரி வசூல் செய்வதே இல்லையாம், வரி வசூலிப்பது என்பது அப்பாவி மக்களை மட்டும் விரட்டி, மிரட்டி வரியினை வசூல் செய்கின்றனர் பில் கலெக்டர்கள்.

இந்த லட்சனத்தில் சொத்து வரிக்கான தீர்மானத்தை ஒத்திவைத்து நிறுத்திவைக்கப் பட்டுள்ள நிலையில் 2024 அக்டோபர் 1ம் தேதி முதல் தமிழகம் முழுவதும் மேலும் "6" சதவிதம் வரியினை உயர்த்தி மக்களை கட்டாயப்படுத்தி வரி வசூல் செய்கின்றனர்.

நகர மற்றும் மாமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் சொத்து வரியினை நிறுத்தி வைப்பது போல நிறுத்தி வைக்கிறோம், அதிகாரிகள் நீங்கள் எப்போதும் போல எப்படி வரியினை வசூலிக்கிறீர்களோ அவ்வாறே வசூலியுங்கள் என்ற வாய் மொழி உத்தரவின் ரகசிய டீலிங் கொடுக்கும் தைரியம் தான், இந்த கூடுதல் வரி வசூலுக்கான காரணம் என்பது தான் திறை மறைவில் உள்ள ரகசியமமாம்.

இதில் இன்னொறு கோல்மால் என்னவெனில் "800" சதுர அடியுள்ள குடியிருப்புக்கு விதிக்கப்படும் வரியினை, ஆயிரம் சதுர அடி கொண்ட வணிக கட்டடங்கள் ஒரெ தொகையாக வசூலித்து சலுகையினை செய்து, கூடுதல் சம் திங்... சம் திங்... பார்த்து விடுகின்றனராம் பில் கலெக்டர்கள்.

இவ்வாறு பொதுவாக மாநகரில் சுமாராக 2 லட்சம் குடியிருப்பு கட்டடங்களில் சுமார் 14,427 குடியிருப்பு கட்டடங்கள் சட்ட விரோத வணிக வளாக கட்டடங்களாக மற்றப்பட்டுள்ளது, ஆனால் இந்த கட்டடங்களுக்கு வீட்டுக்கான வரி வசூலிக்கப்பட்டாலும், வணிக மின்கட்டணம் வசூலிக்கப் படுவது மறுக்க முடியாத உண்மை, வணிக வளாகம் என மின் வாரிய ஊழியர்களுக்கு தெரிந்த உண்மை கூட




உள்ளாட்சி அதிகாரிகளுக்கும், வரி வசூலிக்கும் பில் கலெக்டர்களுக்கு தெரியாமல் போக சம்திங்...சம்திங்... தான் காரணமாம்.

இப்படி பல ஆயிரம் கோடிகளுக்கு நடைபெறும் முறை கேட்டினை நிதித்துறை எச்சரித்தும் அரசு கண்டு கொள்ளாமல் இருக்க காரணம் தான் புரியாத புதிராக உள்ளது.

இப்படி பல ஆயிரம் கோடிகள் வரி வசூல் என்ற பெயரில் முறைகேடுகள் நடப்பதை தடுக்காமல் பொது மக்களின் மீது வரிகளை உயத்துவது அடுத்த தேர்தலில் எதிரோலிக்கும் என்பது கூடவா ஆட்சியாளர்களுக்கு தெரியாது? ■

**முதியோர் இல்லங்கள் நடத்தும் அப்பாவி தனியார் நிறுவனங்களை மிரட்டி கமர்ஷியல் மின் கட்டணமாக மாற்றி பின்பு வீட்டு வரியையும் கமர்ஷியலாக்கி மிரட்டி வரி வசூலிக்கும் கொடுமையும் நடந்து வருகிறதாம். இது போன்ற நிறுவனங்களுக்கு வரி வசூலில் சலுகை காட்ட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.**






## செய்தி நேரம் எதிரோலி...

# சோதனை...


கடந்த 2024 நவம்பர் 16-30 "செய்திநேரம்" இதழில் தமிழக மக்களை அச்சுறுத்தம் டிஜிட்டல் அரெஸ்ட்.. ! என்று செய்தியில் "கடவுளின் மனிதர் மோடி ஆட்சியில் 2014 முதல் தற்போது 2024 வரை இந்தியாவின் இணைய தளத்தின் தகவல் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. எந்த அளவிற்கு உண்மையே, அதே வேகத்தில் வடமாநில கொள்ளையர்களின் டிஜிட்டல் கொள்ளை அசூர வேகத்தில் வளர்ந்துள்ளது"என்ற செய்தியினை தெரிந்து கொண்டு ஆவேசம் அடைந்த மோடி ஜீயின் சர்கார் கொள்ளையர்களின் கூடாரமா உள்ள சுமார் "6" வட மாநிலங்களில் "தேசிய புலனாய்வு முகமை என்.ஐ.ஏ. அதிகாரிகள் தலைமையில் மாநில உள்ளூர் போலிசார் பாதுகாப்பு படை சூழ, 28.11.24 அன்று அதிரடி சோதனை செய்துள்ளனர், இந்த சோதனை சில நாட்களுக்கு அதிரடியாக தொடருமாம், ஒரு நாள், இரு



நாள் சோதனை மட்டும் போதாது மோடிஜி, இத்தகைய சோதனைகள் ரவுண்ட் தி கிளாக் (clock) 24 மணி நேரமும், வருடம் முழுக்க 365 நாட்களும், உங்கள் ஆட்சி நீடிக்கும் 5 வருடங்கள் கொண்ட 1825 நாட்களும் இந்தியாவின் அனைத்து துறைகளிலும் இதே ஆவேசம் நீடிக்க வேண்டும் என்பதே தமிழக மக்களின் விருப்பம்.

# கொடிகட்டி பறக்கும் விபச்சாரம்...

## வேடிக்கை பார்க்கும் போலீஸ்?




திருச்சி மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் டைரக்ட் விபச்சாரம், இன்-டைரக்ட் விபச்சாரம், மசாஜ் விபச்சாரம் கொடி கட்டி பறப்பது தடுக்க முடியாத ஒன்றாகவே உள்ளது.

மாநகரில் உள்ள பெருப்பாலான விடுதிகளிலும், மாவட்டத்தில் உள்ள பண்ணை விடுகளிலும், ஏர்போர்ட், ரேஸ்கோர்ஸ் ரோடு, கே.கே நகர் பகுதி, ஸ்ரீனிவாச நகர் பகுதியில் விபச்சாரம் ஜக ஜோதியாக நடை பெறுவதாக கூறப்படுகிறது.

சமயபுரம் மாரியம்மன் கோயில், வாணபட்டரை தெரு, மசாஜ் சென்டர்கள் அனைத்துலும் விபச்சாரம் இயற்கைக்கு விரோதமான செக்ஸ் சில்மிஷங்கள் அனைத்தும் கல்லூரி பெண்களை வைத்து, 1 மணி நேரத்துக்கு ரூ. 3000 ஆயிரம் வசூலிக்கப்பட்டு, விபச்சாரத்துக்கு இடம் கொடுத்த வீட்டின் உரிமையாளருக்கு ரூ. 1,000, புரோக்கருக்கு ரூ. 1,000, செக்ஸ்சுக்கு அடிமை ஆக்கப்பட்ட பெண்ணுக்கு ரூ. 1000, என ஒரு நாளைக்கு 3 கஸ்டமர்களை சபலப்பட்ட கல்லூரி மாணவிக்கு கொடுத்து, படிக்கும் வயதில் அந்த ஏழைப் பெண்ணை செக்ஸ் ஒர்க்கர் ஆக்கி விடுகின்றனர் என சமூக ஆர்வலர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சமீபத்தில் ஏர்போர்ட்டில் நடை பெற்ற ரைடியில் பறிமுதல் செய்யப்பட்ட டைரியில் உள்ள குறிப்புகள் மாநகர கமிஷனரிடம் சிக்கி விபச்சார தடுப்பு பரிவு சிறப்பு எஸ்.ஐ. சகாதேவன், தனிப்படை போலிசார் பிரதிப், ஜன்ஸ்டீன் உட்பட பலருக்கும் லஞ்சம் கொடுக்கபட்ட குறிப்பினை கண்டு அதிர்ச்சியடைந்த கமிஷனர் காமினி அனைவரையும் கூண்டோடு மாற்றி விபச்சார தனிப் பிரிவை கலைத்தார்.

சிக்கியது சில கருப்பாடுகள் தான் ஆனால், மாநகர் மாவட்டத்தின் பல அதிகாரிகள், ஏட்டையாக்களுக்கு, மாமுல் மட்டுமின்றி விரும்பும் பெண்ணை கேட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் அனுப்பி வைக்கும் ஃப்ரி சர்வீஸ் பெறும் அதிகாரிகளும் உண்டாம்.

அதேப் போல மசாஜ் மையங்கள் அனைத்திலும் ஏழைப் பெண்கள், விதவைப் பெண்கள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், வருமானம் இன்றி தவிக்கும் பெண்களுக்கு பணத்தாசை காட்டி ஒரு கஸ்டமரை திருப்தி படுத்த ரூ. 500/- என தினசரி சுமார் 4 கஸ்டமர்களை கொடுத்தும் அவர்களுக்கு பிராந்தி, ஒட்கா, பீர், கூலிப், போதை மாத்திரை, சிக்ரெட், கஞ்சா பழக்கத்துக்கு அடிமை ஆக்கி சம்பாரிக்கும் நபர்களின் எண்ணிக்கை அதிகளவில் உள்ளதாம்.

விபச்சார தடுப்பு பிரிவு செயல் பட்ட போது மாமுல் கொடுத்து நடத்தப்பட்டதாம், இப்பிரிவு கலைக்கப்பட்ட 3 மாதங்களில் எந்த மாமுலும் இன்றி சுதந்திரமாக நடப்பதை தான் பாரதி கனவு கண்ட பெண் சுதந்திரமா என பலரும் கேள்வி கேட்கின்றனர்.

விட்டிற்கு தெரியாமல் விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்கள் பாலியல் நோய், விடி, எச்.ஐ.வி, மவுத் இன்பெக்ஷன் போன்ற தொற்று ஏற்பட்டு வருவதும் வேதனையளிக்கிறது.

விபச்சார தனிப்பிரிவு கலைக்கப்பட்ட பின்பு அதிகரித்து வரும் விபச்சாரத்தை தடுக்க ஆளில்லாமல் தறிக்கெட்டு ஒடும் அவல நிலையில் தான் திருச்சி மாநகரம் இருப்பதாக சமுக ஆர்வலர்கள் புலம்புகின்றனர்.

மாநகர கமிஷனர் உடனடியாக தலையிட்டு விபச்சார தனிப்பிரிவை நியமித்து, விபச்சாரம் செய்பவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் அதே போல் கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் தொற்றுநோய் பற்றிய விழிபுணர்வுகளையும் வழங்க வேண்டும் என்பதே அனைவரின் எண்ணமாகும்.

### மதுரை நகரில்

# சாலை விதியை மீறும் ஆட்டோக்கள்

## நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை

மதுரை நகரில் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஷேர் ஆட்டோக்கள் இயக்கப்படுகிறது என சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர். மதுரை நகரில் அண்ணா நகர், சுகுணா ஸ்டோர் பஸ் நிறுத்தம், அண்ணா நிலையம், கருப்பாயூரணி அப்பர் மேல்நிலைப் பள்ளி நிறுத்தம், சிம்மக்கல் பஸ் ஸ்டாப், பெரியார் நிலையம், புதூர், கே.கே. நகர் உள்ளிட்ட பல பகுதிகளில் ஷேர் ஆட்டோக்கள் பஸ் நிறுத்தத்தில் நிறுத்தி பொது மக்களுக்கும், அரசு பஸ் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுதப்படுவதாக, சமூக ஆர்வலர் குற்றம் சாட்டுகின்றனர்.

மதுரை நகரில் பல ஷேர் ஆட்டோக்கள் பஸ் நிறுத்தத்தில் வரிசையாக நிறுத்தப்படுவதால், பொதுமக்கள் பஸ்ஸில் பயணம் செய்ய இடையூறாக உள்ளதாகவும், இது குறித்து, மதுரை வட்டார போக்குவரத்து அலுவலர்கள், மதுரை நகர போக்குவரத்து துணை ஆணையர், கூடுதல் ஆணையர், உதவி ஆணையர்கள், போக்குவரத்து ஆய்வாளர்களிடம் புகார் தெரிவித்தும், ஆட்டோக்களை கட்டுப்படுத்தவும், சாலை விதிகளை பின்பற்றவும் அறிவுறுத்தப்படவில்லை என, பொது மக்கள் குறை கூறுகின்றனர்.

மதுரை நகரில், அண்ணா நகர், அண்ணா நிலையம், சிம்மக்கல், பகுதிகளில் ஆட்டோக்கள் அரசு பஸ்கள் போல, பயணிகளை கூவி வலுக்கட்டாயமாக ஆட்டோவில் ஏற்றுவதாகும், மேலும், அதிகளவில் ஆட்டோக்களை பயணிகளை ஏற்றி பயணம் மேற் கொள்ளதாகவும், பலர் குற்றம் சாட்டுகின்றனர்.

மதுரை அண்ணாநகரில் இருந்து பெரியார் செல்லும் பஸ்கள், மதுரை மாட்டுத்தாவணியில் இருந்து, பெரியார் செல்லும் பக்தர் பஸ்கள் அண்ணா பஸ் நிலையத்துக்குள் வழக்கம் போல நின்று செல்ல வேண்டும்.

அண்ணா பஸ் நிலையத்தில் வெளிப்புறங்களில் பஸ் நிறுத்துவதால் ஆட்டோ தொல்லை அதிகம் இருப்பதாகவும், பயணிகள் குற்றம் சாட்டுகின்றனர். இதுகுறித்து, மதுரை போக்குவரத்து துணை ஆணையர், கூடுதல் ஆணையர், வட்டார



போக்குவரத்து அலுவலர்கள் ஆகியோர் தனி கவனம் செலுத்த வேண்டும் என, சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், தலைக் கவசம் இல்லாமல் இரு சக்கரத்தில் வாகனத்தில் பயணிப்பவரை பாய்ந்து பிடிக்கும் போலீசார், விதியை மீறும் ஆட்டோக்களை பிடிக்க ஏன் தயங்குகின்றனர் என, சமூக ஆர்வலர் கேள்வி விடுத்துள்ளனர்.

மதுரை மாவட்டத்தில் விதிகளை மீறும் ஆட்டோக்களை கட்டுப்படுத்த மாநகர போக்குவரத்து போலீசார், மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர், துணைக் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இது குறித்து அவ்வப்போது, மதுரை வட்டார போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் கவனம் செலுத்த வேண்டும் எனவும், இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடைய பிறந்தநாளை முன்னிட்டு விருதுநகர் செந்தில் குமாரா மீனாட்சியம்மாள் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் எம் எல் ஏ ஆர்.ஆர் சீனிவாசன் அவர்கள், நகர் மன்ற உறுப்பினர் எஸ் ஆர் எஸ் மாதவன் அவர்கள் , 12வது வார்டு கவுன்சிலர் குருவம்மாள் கந்தசாமி அவர்கள் நிகழ்ச்சியில் பங்கு பெற்று பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு பென்சில் பேனா இனிப்புகள் வழங்கினர்.



மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு பி.மூர்த்தி அவர்கள் மதுரை மாநகராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மண்டலம் 1 (கிழக்கு) அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மா.செள.சங்கீதா இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி பொன் வசந்த் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திரு தினேஷ்குமார் இ.ஆப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கோ தளபதி (மதுரை வடக்கு)அவர்கள், திரு. மு. பூமிநாதன் (மதுரை தெற்கு) அவர்கள், மாநகராட்சி துணை மேயர் திரு நாகராஜன் அவர்கள்,மண்டல தலைவர் திருமதி. ச.வாசுகி சசிகுமார் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# மதுரை ரயில்வே கிழக்கு நுழைவாயில்

## போக்குவரத்து துணை ஆணையர் தலைமையில் போக்குவரத்து விழிப்புணர்வு நடைபெற்றது




மதுரை ரயில்வே சந்திப்பு கிழக்கு நுழைவு வாயில் பகுதியில் போக்குவரத்து துணை ஆணையர் S.வனிதா அவர்கள் தலைமையில் போக்குவரத்து விழிப்புணர்வு நடைபெற்றது இந்த விழிப்புணர்வில் விபத்து தவிர்ப்பு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய படங்களை 150 அடி நீளத்திற்கு பிளக்ஸ் பேனரில் கல்லூரி மாணவர்கள் சாலையின் இருபுறமும் நின்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

இந்நிகழ்வில் போக்குவரத்து உதவி ஆணையர் S.இளமாறன் மற்றும் போக்குவரத்து காவல் ஆய்வாளர் அ.தங்கமணி மற்றும் மதுரை மேனேஜ்மென்ட் அசோசியேஷன் நிர்வாகி சண்முகசுந்தரம் மற்றும் பல்வேறு கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர்வியாபாரதொழிற்துறைசங்கம்,மெயின் பஜார் வியாபாரிகள் சங்கம் மற்றும் விருதுநகரில் உள்ள அனைத்து வியாபார சங்கங்களும் இணைந்து 29.11.2024 அன்று மத்திய மாநில அரசுகள் இணைந்து ஏற்படுத்திய வாடகை ஒப்பந்த தொகையின் மேல் 18 சதவிகித ஜிஎஸ்டியை முழுவதுமாக நீக்கிடக்கோரி அனைத்து வியாபாரிகளும் கடையடைப்பு செய்துள்ளனர், மெயின் பஜாரில் மனித சங்கிலி போராட்டம் நடத்தி அதன் பின் வணிகவரி துறை அலுவலகம் சென்று மனு கொடுத்துள்ளனர்.



# சேதம் அடைந்த சாலை

மேட்டூரில் பெய்த தொடர் மழையின் காரணமாக மாதையன் குட்டை, ராஜாஜி நகர் பகுதியில் சாலையில் தேங்கிய மழை நீரில் வலைவீசி மீன் பிடித்த இளைஞர்கள். சேதம் அடைந்த சாலையை சீரமைக்க கோரி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பொதுமக்கள் கோரிக்கை.

வாசகர்களிடமிருந்து புதுக்கவிதைகள் வரவேற்கப்படுகின்றது.
தேர்ந்தெடுக்கப்படும் கவிதைகள் செய்தி நேரம் இதழில் வெளியிடப்படும்.
பிரசுரிக்கும் கவிதைகளுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.
WIN PRIZE
அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், செய்தி நேரம் இதழ்,
2/48 C, சம்பூர்தி காம்ப்ளக்ஸ், வி எஸ் டி மோட்டார் (அருகில்)
பொன்னகர், திருச்சி-620001. Whatsapp: 99434 83046

# கேஸ் சிலிண்டர் விநியோகிப்பவர்களுக்கு ஊதியம் கொடுக்காமல் ஏமாற்றும்

# கில்லாடி... ஏஜென்சிகள்...



நாடு சுதந்திரம் அடைந்து 77 ஆண்டு காலம் முடிந்தும் (கடந்தும்) மக்களுக்கான நிரந்தர வேலை வாய்ப்பு, தரமான உணவு, அடிப்படை சம்பளம், வேலைக்கான பலன்கள், நிரந்தர பென்சன், தரமான (சிறந்த) மருத்துவம், நிம்மதியான வாழ்க்கை எதுவுமே சரியாக கிடைக்காமல் சிரமப்படும் மக்கள் உள்ள நாடு தான் இந்தியா என்பதே யதார்த்த உண்மை.

அயல் நாடுகளுக்கு சொகுசாக செல்லவும், ஊர்வலம் வரவும், கார்பரேட்களுக்கு வேலைகளை அள்ளி கொடுத்து சம்பாரிக்க வழி செய்வதில் காட்டும் அக்கறையினை மத்திய மாநிலங்களை ஆளும் அரசியல் வாதிகள் வழி செய்து கொடுக்காததை அந்த சொக்கநாதனும் வேடிக்கை பார்ப்பது தான் வேதனை.

அரசுத்துறை, பொதுபணிதுறை, தனியார் கார்பரேட்கள், செய்தித் துறை, ஒரு பொருளை விற்று கொடுத்தால் 20% கமிஷன், விற்காவிட்டால் ஒன்றும் கிடையாது என அப்பாவி மக்களின் ரத்தம், வியர்வையினை உருஞ்சி எடுப்பதை தடுக்க முடியாத அரசு ஒன்று செயல்படுகிறது என்றால் அது நமது நாட்டில் தான்.

இந்தியா முழுவதும் கொள்ளை லாபம் பார்த்து பல லட்சம் கோடிகளை அல்லும் இவர்கள் எழை தொழிலாளர்களுக்கு கிள்ளி கொடுக்க மனசு வராதது இவர்களின் கல் நெஞ்சத்துக்கான சாட்சி.

இந்தியா முழுவதும் பெட்ரோல், டீசல், கரண்ட் (பேட்டரி வண்டிகளுக்கு), கேஸ் விநியோகிப்பதில் கொள்ளை லாபம் பார்க்கும் "இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்" அதன் கிலாஸ் ஒன் அதிகாரிகளுக்கு ஒரு விதமாகவும், ஊழியர்களுக்கு ஒரு விதமாகவும், ஒப்பந்த ஊழியர்களுக்கு ஒரு விதமான சம்பளம் வழங்கி பாராபட்சம் காட்டுவதும், இஸ்டத்துக்கு கேஸ், பெட்ரோல், டீசல் விலையினை ஏற்றுவதும், சர்வதேச கச்சா எண்ணையின் விலை வீழ்ச்சியின் போதும் மக்களுக்கான விலையினை குறைக்காமல் மக்களிடம் சுரண்டி பிடுங்குவதே கொள்கை என்ற "இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின்" செயல்பாடு வேதனைக் குறியது. இதை கட்டுப்படுத்த வேண்டிய இந்திய அரசு வேடிக்கை பார்ப்பதே மக்களின் வயிற்று எறிச்சல் அதிகரிக்க காரணம்.

இந்தியாவில் அங்கிகரிக்கப்பட்ட 1,500 க்கு மேற்பட்ட கேஸ் ஏஜேன்சிகள், வி நி யோ க ஸ் த ர் க ள் ம க் க ளு க் கு கேஸ் சிலிண்டர் சப்ளை செய்யும் டெலிவரி மேன்களுக்கு (டெலிவரி ஊழியர்களுக்கு)டெலிவரிகான சொற்ப கட்டணம் அனைத்து ஏஜென்சிகளுக்கும் வழங்குகிறது, இந்த சொற்ப கட்டணத்தை ஏஜென்சிகள் டெலிவரி மேன்களுக்கு வழங்காமல், விற்பனையில் கிடைக்கும் லாபத்துடன் டெலிவரி மேன்களுக்கான மாதாந்திர கட்டணத்தையும் சுவாஹா செய்து விடுகின்றன.

மேலும் டெலிவரி மேன்களுக்கான குறைந்தபட்ச மாதாந்திர சம்பளமோ, தொழிலாளர்களுக்கான வருகை (Atendence Register) எதுவும் கிடையாது, தொழிளாளர்களுக்கான சட்டங்கள் மீறப்படுவதை எந்த லேபர் ஆபிசரும், அரசும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனும் கண்டு கொள்வதில்லை, (இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனில்பணிப்புரியும் லேபர்கள், அவுட்சோர்ஸ் முறையில் ஒப்பந்ததாரர்களால் நியமிக்கப் கப்படும் லேபர்கள், லோட்மேன்களின் நிலமையும் இதே நிலையில் தான் உள்ளது).

தொழிளாலர்களுக்கு நியாயம் கேட்க வேண்டிய கம்யூனிஸ்ட் சங்க தோழர்களும், கட்சி சங்கங்களும், அனைத்து திரவ பெட்ரோலிய எரிவாயு சிலிண்டர் டெலிவரி ஆண்கள் தொழிற்சங்கமும் மவுனமாக இருந்து சட்ட நடவடிக்கைகள் எடுக்காத காரணம் அவர்களுக்கே வெளிச்சம்.

அரசின் ஆணைப்படி கேஸ் டெலிவரி மேன்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.10,671ஐ ஊதியமாக தரவேண்டும் என்ற ஆனையினை கூட கேஸ் ஏஜென்சிகள் செயல் படுத்தாமல் இருப்பதும், இதை அரசுகள் வேடிக்கை பார்பது என்பது புரியாத புதிராக உள்ளது.

ஒரு சில ஏஜென்சிகளின் ஊழியர்களின் கணக்கில் ரூ. 3,000 முதல் ரூ. 8,000 வரைக்கான சம்பளத்தை அந்த கேஸ் டெலிவரி மேன்னின் வங்கி கணக்கில் டெப்பாசிட் செய்தும், பின்பு இதை மிரட்டி திரும்பி பெற்று கொள்வதும், டெலிவரி மேன்களை வேதனை பட செய்துள்ளது. இவர்கள்இப்படி செய்வதால்தான்டெல்வரி மேன்கள் சிலிண்டரை வீடுகளுக்கு சப்ளை செய்யும் போது வீட்டின் உரிமையாளரிடம் இருந்து ரூ.50 முதல் ரூ.75 (மேல் மாடிக்கு கொண்டு செல்ல ரூ.75) கொடுக்கும் படி மக்களை காட்டாயப்படுத்தி சிரமப்பட வைக்கின்றனர்.

இதில் வேதனை என்னவெனில் ஒவ்வொரு டெலிவரி மேனும் குறைந்த பட்சம் 50 முதல் 75 சிலிண்டர் சப்ளை செய்வதின் மூலம் அவருக்கு கிடைக்கும் வருமானம் ரூ.2500 முதல் ரூ.3750, இந்த வருமானத்திலும் சிந்தாமணி, அமராவதி, போன்ற கூட்டுறவு சங்கங்களின் மேனேஜர், சூப்பர்வைசர், கிளார்க் என அனைவரும் மாலை நேரத்தில் கணக்கு மற்றும் பணம் ஒப்படைக்கும் போது ஒவ்வொரு டெலிவரி மேனிடம் இருந்து குறைந்த பட்சம் 50 சதவிதம் சட்ட விரோதமாக பிடுங்கி வருகின்றனராம், கொடுக்க மறுக்கும் டெலிவரி மேன்களுக்கு சப்ளைக்கான சிலிண்டரின்எண்ணிக்கையினை குறைத்து அவரின் வருமானத்திலும் அடிவயிற்றிலும் கை வைப்பதால், வேறு வழி இன்றி இந்த லஞ்சத்தை கொடுக்கும் சூழலுக்கு தள்ளப் படுகின்றனர். "பிச்சை எடுக்குமாம் பெருமாளு... அதையும் புடுங்கி தின்னுமாம் அனுமாரு" என்ற நிலையில் தான் டெலிவரி மேன்கள் தத்தளிக்கின்றனர்.

# செக்போஸ்ட் அமைக்க பொதுமக்கள் கோரிக்கை



மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் விமான நிலையச் சாலை புளியங்குளம் விலக்கு பகுதியில் கனரக வாகனங்களின் நுழைவை கட்டுப் படுத்திடும் வகையில் போலீஸ் செக்போஸ்ட் அமைத்திட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருமங்கலம் நகரில் ரயில்வே மேம்பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதால் அவ்வழியாக கனரக வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டு இருப்பதாலும், கப்பலூர் சுங்கச் சாவடியில் கட்டணம் செலுத்தாமல் சென்றிடும் கனரக வாகனங்கள் நகருக்குள் நுழைந்திடாமல் தடுத்திடுவதற்காகவும் திருமங்கலம் நகர் விமான நிலையச் சாலையிலுள்ள புளியங்குளம் விலக்கு பகுதியில் போக்குவரத்து போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் மூலம் திருமங்கலம் நகரில் கனரக வாகனங்கள் நுழைவது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. போலீசார் கண்காணிப்பு மேற்கொள்ளும் புளியங்குளம் விலக்கு மிகவும் ஆபத்தான பகுதி என்பதால் அங்கே வேகத் தடைகள் அமைத்திட வேண்டும் என்றும் மழை, வெயில் என இயற்கை காரணிகளுக்கு மத்தியில் சிரமமின்றி பணியாற்றிட ஏதுவாக நிழற்குடையுடன் கூடிய போலீஸ் செக் போஸ்ட் அமைத்திட வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே திருமங்கலம் நகரில் விமான நிலையச் சாலை வழியாக நுழைந்திடும் கனரக வாகனங்கள் மூலம் ஏற்படும் விபத்துக்களை தடுத்திடவும், ரயில்வே மேம்பால பணிகள் நிறைவடைந்திடும் வரையிலும் புளியங்குளம் விலக்கு பகுதியில் போலீஸ் செக்போஸ்ட் அமைத்திட வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாக உள்ளது.




# ஹோலி கிராஸ் கல்லூரி மாணவர்களுக்கு சட்டம் பற்றிய கருத்துகளை

# எடுத்துரைத்த நீதிபதிகள்






திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியில் உள்ள மகளிர் ஆய்வு மையத்தின் மாணவர்கள் "பெண்கள் மற்றும் சட்டம்" என்ற சான்றிதழ் படிப்பின் ஒரு பகுதியாக திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்றத்திற்கு வருகைதந்தனர்.

உதவிப்பேராசிரியை மற்றும் மகளிர் ஆய்வுகளின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி.பிரிஷீலா அவர்களுடன், மொத்தம் 58 மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் இந்தக் கண்காணிப்பு அமர்வில் பங்கேற்றனர்.

இதில் முதன்மை மாவட்ட நீதிபதியும், தலைவருமான திரு.எம்.கிறிஸ்டோபர், பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும், நீதியை உறுதி செய்வதிலும் நீதித்துறையின் பங்கு குறித்துப் பேசினார். சட்டம் எவ்வாறு சமத்துவத்தையும் நேர்மையையும், குறிப்பாக பாலின உணர்திறன் பிரச்சினைகளில் ஊக்குவிக்கும் என்பதை அவர் வலியுறுத்தினார்.

துணை நீதிபதியும் செயலாளருமான திரு.சி.சிவக்குமார், வழக்கு நிர்வாகத்தின் செயல்முறை அம்சங்கள் மற்றும் பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை கையாளும் போது உணர்திறன் முக்கியத்துவம் குறித்து விவாதித்தார். நீதித்துறை செயல்முறை எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பற்றிய நடைமுறை புரிதலை மாணவர்களுக்கு வழங்கினார்.

நிரந்தர லோக் அதாலத்தின் தலைவர் திரு எஸ். ஜெய்சிங், சரியான நேரத்தில் மற்றும் அணுகக்கூடிய நீதியை வழங்குவது, தகராறுக்கான தீர்வு (ADR) வழிமுறைகளின் பங்கை எடுத்துரைத்தார். நீண்ட கால வழக்குகள் இல்லாமல், சமரசம் மற்றும் நடுவர் போன்ற முறைகள் எவ்வாறு வழக்கை திறமையாக தீர்க்க உதவுகின்றன என்பதை அவர் விளக்கினார்.

# மழைக்காலத்தில் இதெல்லாம் செய்யாதீங்க;

1. மின் கம்பிகளில் துணிகளை உலர்த்தக் கூடாது. மின் கம்பங்கள், வேலிகள் அருகில் நிற்கவோ அல்லது தொடவோ கூடாது.
2. மின் கம்பங்களில் கால்நடைகளை கட்டக் கூடாது.
3. இடி, மின்னல் பலமாக ஏற்படும் சமயங்களில் டிவி, மிக்சி, கிரைண்டர், தொலைபேசி போன்றவற்றை பயன்படுத்தக் கூடாது. மின்சாரத்தால் தீவிபத்து ஏற்பட்டால் உடனே மெயின் சுவிட்சை அணைக்க வேண்டும்.
4. அறுந்து கிடக்கும் மின் கம்பிகளை கண்டால் உடனே மின்சார வாரியத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
5. கை சுத்தம், வீட்டு சுத்தம், கழிப்பறை சுத்தம் காக்கப்பட வேண்டும். பொது இடங்களில் எச்சில் துப்பக்கூடாது.




திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியில் சர்வதேச மாநாடு நடைப்பெற்றது. இந்த மாநாட்டில் இந்தியாவில் பாலின சமத்துவத்தின் வரலாற்று பரிணாம வளர்ச்சி மற்றும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அரசியலமைப்பின் பங்கு குறித்து கவனம் செலுத்தபட்டது. இந்த மாநாடு பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதில் அரசியலமைப்பு விதிகளின் பங்கை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது, அனைத்து பாலினங்களுக்கும் சம உரிமைகளை அடைவதில் உள்ள சவால்களை மதிப்பிடுவது மற்றும் இந்த பகுதியில் அரசியலமைப்பு வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்கான கொள்கை நடவடிக்கைகள் பற்றி விவாதிக்கிறது. இந்த நிகழ்வு ஒரு ஊடாடும் அமர்வுடன் முடிந்தது, அங்கு பங்கேற்பாளர்கள் தீவிரமாக விவாதங்களில் ஈடுபட்டு, அரசியலமைப்பு வழிமுறைகள் மூலம் பாலின சமத்துவத்தை முன்னேற்றுவது குறித்த தங்கள் நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

## உங்கள் பக்கம்

அன்பார்ந்த வாசகர்களே..
உங்கள் ஊரில்/பகுதியில் நடந்த சுவாரசியமான சம்பவங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.
தகுதியானவை பிரசுரிக்கப்படும். மேலும் உங்கள் படைப்புகளுக்கு தகுந்த சன்மானமும் வழங்கப்படும்.
எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர், செய்தி நேரம் இதழ்
2/48 சி சம்பூர்தி காம்ப்ளக்ஸ், வி.எஸ்.டி மோட்டார் (அருகில்),
பொன்னகர், திருச்சி-620001.
Whatsapp: 9943483046













# திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியில் சர்வதேச மாநாடு

## “பொருள் ஆராய்ச்சியின் எல்லைகள்: பசுமையான எதிர்காலத்தை நோக்கிய புதுமைகள் மற்றும் சவால்கள்”






திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியின் (தன்னாட்சி) வேதியியல் முதுகலை ஆராய்ச்சித் துறைமற்றும்தமிழ்நாடு திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகபொருள் அறிவியல் துறையும்இணைந்து, தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில் (TNSCST) நிதியுதவியுடன் பொருள் ஆராய்ச்சியின் எல்லைகள், பசுமையான எதிர்காலத்தை நோக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் சவால்கள் (FMRICGF-2024) என்ற தலைப்பில்இரண்டு நாள் சர்வதேச மாநாட்டை நவம்பர் 26 மற்றும் 27 நவம்பர் தேதிகளில் நடத்தியது.

உலகெங்கிலும் உள்ள ஆராய்ச்சியாளர்கள், வேதியியலாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் தங்கள் ஆராய்ச்சித் துறையில், தங்கள் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை முன்வைக்க ஒரு தளத்தை வழங்குவதே மாநாட்டின் நோக்கமாகும்.

தொடக்க விழாவுடன் நிகழ்ச்சி தொடங்கியது. மாநாட்டு ஒருங்கிணைப்பாளர், வேதியியல்ஆராய்ச்சித்துறையின்தலைவர் மற்றும் இணைப்பராசிரியைமுனைவர். A.லீமாரோஸ்வர வேற்றார். காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இயக்குநர் பேராசிரியர்முனைவர்.S.மீனாட்சி தொடக்க உரை நிகழ்த்தினார். மாநாட்டின் சிறப்பம்சங்களை திருவாரூர் தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழக தொழில்நுட்பப் பள்ளியின் பொருள் அறிவியல் துறை பேராசிரியர் மற்றும் டீன் முனைவர் K.சேதுராமன் விளக்கினார். காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இயக்குநர் பேராசிரியர் முனைவர். S. மீனாட்சி, விழாமலரை வெளியிட முதல் பிரதியை கல்லூரிமுதல்வர்முனைவர்.அருட்சகோதரி. P.ராஜகுமாரி பெற்றுக்கொண்டார்.

ஹோலிகிராஸ்கல்லூரிசெயலர்முனைவர்.அருட்சகோதரி. சற்குனா, கல்லூரிமுதல்வர்முனைவர்.அருட்சகோதரி.P.ராஜகுமாரி,மற்றும் திருவாரூர் மத்திய பல்கலைக்கழகஇணை பேராசிரியர் மற்றும் தலைவர்முனைவர். S. பீர் முகமது,வாழ்த்துரைவழங்கினர். முனைவர்.L. கேத்ரின். வேதியியல் துறை உதவிப் பேராசிரியர் நன்றி கூறினார்.

தொடக்க விழாவைத் தொடர்ந்து ஐந்து தொழில்நுட்ப அமர்வுகள் நடைபெற்றன. இரண்டாவது நாள் நான்கு தொழில்நுட்ப அமர்வுகள் நடைபெற்றன. புதுச்சேரி நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் பேராசிரியர் முனைவர்.P.தங்கதுரை நிறைவுரையாற்றினார். மாநாட்டின் அறிக்கை அமைப்புச் செயலாளரும், வேதியியல் துறை உதவிப் பேராசிரியருமான முனைவர். J.ஃபெலிசிட்டா புளோரன்ஸ் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

இன்ஸ்டிடியூட் ஆப் கெமிக்கல் ரிசர்ச் ஸ்பெயின்,டேலியன் யுனிவர்சிட்டிசீனா,பசிலிகாட்டா பல்கலைக்கழகம் இத்தாலி,கான்செப்சியன் பல்கலைக்கழகம் சிலி, ஜாகிலோனியன் பல்கலைக்கழகம் போலந்து,தேசிய தைபே தொழில்நுட்ப பல்கலைக்கழகம் தைவான் போன்ற புகழ்பெற்ற நிறுவனங்களின் மாணவர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள் மற்றும் பேராசிரியர்கள் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டனர்.

உலகம் முழுவதிலுமிருந்து ஏறக்குறைய 76 பங்கேற்பாளர்கள் மாநாட்டிற்கு பதிவு செய்தனர். 56 ஆய்வுகள்மெய்நிகர்மற்றும்நேரடிமுறைகளில்சமர்ப்பிக்கப்பட்டன. மாநாட்டின் ஒவ்வொரு அமர்விலும், தற்போதைய ஆராய்ச்சித் துறைகளில் சிறந்த ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் மற்றும்முன்னேற்றங்கள் விவாதிக்கப்பட்டன.ஆராய்ச்சிக்கான புதிய யோசனைகள் பங்கேற்பாளர்களை வளப்படுத்தியது.

வேதியியல் மற்றும் இயற்பியல் அறிவியல் மற்றும் வெளிப்புற ஆராய்ச்சியின் முக்கிய பகுதிகள் பற்றிய உள்நோக்கங்களைப் பெற அவர்களுக்கு உதவியது.

மொத்தத்தில், இரண்டு நாள் சர்வதேச மாநாடு, உயிரியல் பொருட்கள், கணக்கீட்டு பொருட்கள், தொழில்துறை பொருட்கள், நிலையான பொருட்கள், உருவகப்படுத்துதல், பண்பேற்றம் மற்றும் ஸ்மார்ட் பொருட்களின் கட்டுப்பாடு போன்ற பல்வேறு சமீபத்திய தற்போதைய ஆராய்ச்சித் துறைகளில் தற்போதைய உலகளாவிய ஆராய்ச்சிக்கு ஒரு நல்ல கண்ணோட்டத்தை வழங்கியது.

# தென்காசி பகுதியில் முதியோர் பராமரிப்பு இல்லம் திறப்பு



தென்காசி மாவட்டம் குத்துக்கல்வலசையில் கோகிலம் முதியோர் பராமரிப்பு இல்லம் திறப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சியின் தொடக்கமாக சாம்பவர் வடகரை சேகர குரு சுந்தர பாண்டியபுரம் கிளை பாஸ்டர் ஜெபரத்தினம் ஜெபம் செய்தார்.

இந்த விழாவின் சிறப்பு அழைப்பாளராக தென்காசி ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் ஷேக்அப்துல்லா தலைமையேற்று புதிய இல்லத்தினை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் குத்துக்கல்வலசை ஊராட்சி மன்ற தலைவர் சத்யராஜ் முன்னிலை வகித்தார்.இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ மருத்துவமனை நிறுவனர் டாக்டர் திருமலைகுமார், மாநில காங்கிரஸ் பேச்சாளர் ஆய்க்குடி பெரியசாமி, கடையநல்லூர் முன்னாள் காங்கிரஸ் நகர தலைவர் அசன் இப்ராஹீம், குத்துக்கல்வலசை ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சண்முக சுந்தரம், கடையநல்லூர் கேஎப்ஏ. 1986 டிரஸ்ட் நிர்வாகி சாகுல் ஹமீது, தென்காசி வட்டார காங்கிரஸ் தலைவர் பெருமாள், ஏஜிஎம்.கணேசன் மற்றும் சுந்தர பாண்டியபுரம், சாம்பவர் வடகரை சேகர இறை மக்கள் திரளானோர் பங்கேற்றனர்.நிகழ்ச்சியின் நிறைவில் கோகிலம் முதியோர் பராமரிப்பு இல்லத்தின் நிர்வாகி புஷ்பா நன்றி கூறினார்.




செய்தி நேரம்
மாதமிருமுறை இதழ்
மலர் 3 - இதழ் 18 - டிசம்பர் 01 - 15, 2024
ஆசிரியர்-வெளியீட்டாளர்
பேரா.சு.சதாசிவம் M.A., B.Ed., M.Phil.,
இணை ஆசிரியர்
A.ஐசக் அருள்ராஜ்
துணை ஆசிரியர்
M.ஜான் ஜெயராமன்
உதவி ஆசிரியர்
S.குமரேசன்
நிருபர்கள்
A.தமிழரசு, S.வேல்முருகன், S.ஸ்டாலின், G.கனகசுந்தர், G.பூமிநாதன், M.பெரிய கருப்பசாமி, S.சபரி, A.சின்னசாமி, S.ராமன், D.சீனிவாசன் A.பாலாஜி, M.சையத் அலி, N.ஜார்ஜ் ராஜ மித்ரன், S.செல்வகுமார்,K.M.முகமது மிர்சா
கௌரவ ஆலோசகர்:
A.R.முஹம்மது அபு பக்கர் சித்திக்
சட்ட ஆலோசகர்கள்:
வழக்கறிஞர் R.சரவணன் M.I.., உயர்நீதிமன்றம் சென்னை
மூத்த வழக்கறிஞர் J.மதியழகன் B.A.B.L.,
பக்க வடிவமைப்பு
Rathna Graphics
செய்தி நேரம்
முகவரி: எண் 2/48 சி, சம்பூர்தி காம்ப்ளக்ஸ், 2வது தளம், பொன்னகர், திருச்சி-620 001
Cell: 94438-52805, 99434-83046
E Mail: seithineram@gmail.com

செய்தி நேரம் மாதமிருமுறை இதழில் வெளியாகும் செய்திகளின் கருத்துக்கள் அவர்களின் சொந்த கருத்துக்களே நிர்வாகத்தின் கருத்தல்ல. செய்தி நேரம் மாதமிருமுறை இதழில் வெளியாகும் விளம்பரங்களின் வாசகங்களுக்கும் அதன் நம்பகத் தன்மைக்கும் நிர்வாகம் எந்த வகையிலும் பொறுப்பேற்காது. பத்திரிகை தொடர்பான எல்லா வழக்குகளும் திருச்சி நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.

Printed by S.Balasubramanian and Published by S.Sathasivam on behalf of S.Sathasivam and Printed at Sankarji Computer Graphics Printer, No.8/31, Seegampatti, K. Puthupatti (Post), Kulithalai (Taluk), Karur (District)-639 105. and Published at No.5/185, Thiruvalarchipatti, Airport (post), Tiruchirappalli-620 007. E-Mail : seithineramtry@gmail.com

Editor : S.SATHASIVAM